

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளரும், கோபி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான என். நல்லசிவம் கோபி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுக்கரைப்புதூர், குழவிகரடு பகுதிகளில் வீதி, வீதியாகச் சென்று நடந்து முடிந்த தேர்தலில் வாக்களித்த மக்களுக்கு நன்றி கூறினார். அதுபோது கோபி நகர கழக செயலாளர் என்.ஆர்.நாகராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் தொகுதி தபால் வாக்கு வேறு தொகுதிக்கு மாறியது ஏன்?

## தேர்தல் ஆணையம் பதிலளிக்க உத்தரவு!

சென்னை, மே 12 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் எதிர்த்துப் போட்டியிட்ட தவெக வேட்பாளர் சீனிவாச சேதுபதியிடம் தோல்வியை சந்தித்தார்.

அதையடுத்து, திருப்பத்தூர் தொகுதிக்கான எம் எல்ஏவாக தேர்வாகியுள்ள சீனிவாச சேதுபதி சட்டப்பேரவையில் நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பு மற்றும் சட்டப்பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்க தடை விதிக்கக்கோரியும், வேலூர் அருகில் உள்ள திருப்பத்தூர் தொகுதிக்கு மாற்றி அனுப்பப்பட்ட ஒரு தபால் வாக்கை மீட்டு திருப்பத்தூர் தொகுதி கணக்கில் சேர்க்க உத்தரவிடக்கோரியும் ஒரு ஓட்டில் வெற்றி வாய்ப்பை இழந்த தி.மு.க. வேட்பாளர் கே.ஆர்.பெரியகருப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எல். விக்டோரியா கவுரி, என். செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய விடுமுறை கால அமர்வில் அவசர வழக்காக ஞாயிற்று க்கிழமையான நேற்று முன்தினம் விசாரிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ஒரு தொகுதிக்கான தபால் வாக்கு வேறு ஒரு தொகுதிக்கு மாற்றி அனுப்பி வைக்கப்பட்டது குறித்து மனுதாரர் எழுப்பிய கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் உரிய விளக்கமளிக்காதது ஏன்? ஒரு வாக்கு வித்தியாசத்தில் மனுதாரர் தனது வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார்.

இப்போது தனக்கான ஒரு தபால் வாக்கை அதிகாரிகள் வேறு தொகுதிக்கு மாற்றி அனுப்பியுள்ளதாக மனுதாரர் குற்றம் சாட்டுகிறார். ஒரு வாக்கு என்றாலும் அதற்கு பதிலளிக்க வேண்டிய கடமை தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது. எனவே இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும், என உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளனர்.

# 13,056 சதுர கிலோ மீட்டர் வனப்பரப்பு ஆக்கிரமிப்பு!

## காடுகளை அழிப்பதே இயற்கை பேரிடர்களுக்கு காரணம்!

புதுடெல்லி, மே 12 - இந்தியாவில் 25 மாநிலங்களில் மொத்தம் 13,056 சதுர கிலோ மீட்டர் வனப்பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இது டெல்லி, சிக்கிம், கோவா ஆகியவற்றின் மொத்த நிலப்பரப்பை விட அதிகம் என்று சமீபத்தில் தேசிய பசுமை தீர்ப்பாயத்திடம் இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிக்கை அளித்துள்ளது. இதில் மத்திய பிரதேச மாநிலத்தில் அதிகபட்சமாக 5,461 சதுர கிலோ மீட்டர் வனப்பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அசாம் மாநிலம் 3,621 சதுர கிலோ மீட்டர் என்ற அளவில் இரண்டாமிடத்தில் உள்ளது.

கர்நாடகா, மகாராஷ்டிரா, அருணாசல பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களிலும் குறிப்பிட்ட அளவு வனப்பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. இதில் 409.77 சதுர கிலோமீட்டர் வனப்பரப்பு மட்டுமே ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும் இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது இயற்கை மேம்பாடு சார்ந்த வனஆர்வலர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து வன உயிரின மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் கூறியதாவது: இந்தியாவை பொறுத்தவரை கடந்த சில ஆண்டுகளாக வனப்பகுதி ஆக்கிரமிப்பு என்பது தொடரும் அவலமாக உள்ளது.

இதை வனப்பரப்பு ஆக்கிரமிப்பு என்று சொல்வதை விட, 'அரிய உயிரினங்களின் வாழ்விட அழிப்பு' என்றே சொல்ல வேண்டும். இந்த வாழ்விட அழிப்பு என்பது வனங்களில் உள்ள உயிரினங்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உலகளவில் சராசரியாக 33.3 சதவீதம் வனப்பகுதி உள்ள நிலையில், இந்தியாவில் 21 சதவீதம் அளவுக்கே வனப்பகுதிகள் உள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் 16 லட்சம் ஹெக்டேருக்கு மேற்பட்ட மரங்கள் அழிக்கப்பட்டுள்ளது என்று உலக இயற்கை வள அமைப்பின் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

தொடர்ந்து காடுகள் அழிக்கப்படுவதால் விலங்குகள், பறவைகள், பாசிகள், பூச்சிகள் என்று 10 லட்சத்திற்கும் மேற்பட்ட அரிய உயிரினங்கள் அழிவின் விளிம் பில் சிக்கி இருப்பதாக புள்ளி விபரங்கள் கூறு கிறது.

இந்த வனங்கள் தான் தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிர்களுக்கு வாழ்விடமாக திகழ்கிறது. வனங்களை ஆக்கிரமித்து அழிக்கும் போது பல்லுயிர் பெருக்கமும் கடுமையாக பாதிக்கப்படுகிறது. இது மட்டுமன்றி ஓரினச் சேர்க்கை மூலம் கார்பன்டை ஆக்சைடை உறிஞ்சி பூமியின் காலநிலையை ஒழுங்குப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கு பல்லுயிர்களும் துணைநிற்கிறது.

நீடித்த வளர்ச்சி என்பதும் இயற்கை வளங்களை சிக்கனமான முறையில் திறம்பட பயன்படுத்துவதையே உணர்த்துகிறது. தொழில்மயமாகி வரும் உலகில் இயற்கை வளங்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் இயற்கை வளங்களை நம்பியுள்ள ஏழை, எளிய மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். இயற்கை வளத்தை பாதுகாப்பது மிகவும் அவசியம் என்பது உலகளாவிய இலக்காக உள்ளது. இது நிறைவேற வேண்டும் என்றால் இந்த பூமியில் வாழும் பிற உயிர்களின் தேவையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இதற்கு வனப்பரப்பு ஆக்கிரமிப்பை முழுமையாக தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு நிர்வாகிகள் கூறினர்.

**உலகில் வேறு எங்குமில்லை**

உலகநாடுகளில் இல்லாத தனித்துவமான சில விலங்கினங்கள் இந்தியாவில் மட்டுமே உள்ளது. உலகின் பழைய குரங்கினமாக கருதப்படும் சிங்கவால்குரங்கு கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் காணப்படுகிறது. நீலகிரி வரையாடுகள் தமிழ்நாடு, கேரளாவில் உள்ளது. இது தென்னிந்தியாவின் தனித்துவ உயிரினமாக கருதப்படுகிறது. காஷ்மீர் கங்குல் எனப்படும் சிவப்பு மான்கள், உலகின் பழமையான உயிரினம் என்று கருதப்படும் கங்கைடால்பின், மணிப்பூரில் உள்ள சங்காய் எனப்படும் முன்மண்டைக்கொம்புடைய மான், இந்திய மூக்கு கொம்பன் எனப்படும் காண்டாமிருகம், மேற்கு தொடர்ச்சி மலைகளில் காணப்படும் ராட்சத அணில் போன்றவை உலகில் வேறு எங்கும் இல்லை. இதை உணர்ந்தும் அரிய உயிரினங்களை நாம் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்கின்றனர் வனஉயிரின ஆர்வலர்கள்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேதாரண்யம் நகரக் கழக செயலாளர் மா.மீ. புகழேந்தி கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க வேதாரண்யம் சட்டமன்ற தொகுதி வேதாரண்யம் கிழக்கு ஒன்றியத்தில் கழகத்திற்கு வாக்கு அளித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், வேதாரண்யம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் என். சதாசிவம் மற்றும் பலர் உள்ளனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### கோடை விடுமுறை எதிரொலி;

# மாமல்லபுரத்தில் குவிந்த சுற்றுலா பயணிகள்!

மாமல்லபுரம், மே 12 - இந்த கோடை விடுமுறையை கழிக்க தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான சுற்றுலா பயணிகள் கார், வேன், அரசு மற்றும் தனியார் பேருந்துகளில் தங்களது குடும்பத்தோடு மாமல்லபுரத்தில் குவிந்தனர். இவர்கள் வருகையால் மாமல்லபுரத்தின் முக்கிய வீதிகளில் சுற்றுலா பயணிகள் கூட்டம் நிறைந்து காணப்பட்டது.

தொடர்ந்து, கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு, வெண்ணெய் உருண்டை பாறை உள்ளிட்ட புராதன சின்னங்களை கண்டு ரசித்து செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்ச்சி அடைந்தனர்.

மேலும், மாமல்லபுரத்துக்கு ஏராளமான சுற்றுலா வாகனங்கள் படையெடுத்ததால் கிழக்கு ராஜவீதி, கடற்கரை செல்லும் சாலை, ஐந்து ரதம் சாலை, திருக்கழுக்குன்றம் சாலை, கோவளம் சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் வெளியேற முடியாமல் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து நீண்ட தூரம் வரிசை கட்டி நின்றது. இதனால், உள்ளூர் மக்கள், சாலையோர வியாபாரிகள் கடும் சிரமமடைந்தனர். நேற்று, காலையில் இருந்து மதியம் 1 மணி வரை குறைந்த பயணிகளே வந்தனர். மதியம் 1 மணிக்கு பிறகு ஏராளமான வாகனங்களில் பயணிகள் வரத் தொடங்கினர். இதனால், கிழக்கு கடற்கரை சாலை, பூஞ்சேரி நுழைவு வாயில் பகுதியிலும் கட்டுக்கடங்காத போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கடைகளை வழிமறித்தும், சாலைகளை ஆக்கிரமித்தும் வாகனங்கள் தாறுமாறாகநிறுத்தப்பட்டதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வியாபாரிகள், உள்ளூர் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். புராதன சின்னங்களை சுற்றிப் பார்த்த பயணிகள் ஏராளமானோர் கடற்கரைக்கு சென்று, சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை ஆபத்தை உணராமல் கடலில் இறங்கி குத்தாட்டம் போட்டதை காணமுடிந்தது. ஒரு சில, இடங்களில் வாகனங்கள் கண்மூடித்தனமாக நிறுத்தப்பட்டது. பின்னர், போக்குவரத்து போலீசார் விரைந்து வந்து, வாகனங்களை அப்புறப்படுத்தி மாற்றுப்பாதையில் வெளியேற்றி போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தினர்.

எனவே, சனிஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் கூடுதல் போக்குவரத்து போலீசாரை நியமிக்க போலீஸ் உயரதிகாரிகள் நடவடிக்கை வேண்டும் என உள்ளூர் மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

**பொதுமக்கள் வலியுறுத்தல்!**

கோடை விடுமுறையை கொண்டாடும் வகையில், மாமல்லபுரத்திற்கு கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும் என சுற்றுலாப் பயணிகள் வலியுறுத்தியுள்ளனர். சென்னையின் பல்வேறு பகுதிகள் மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்தும் தாம்பரம், பல்லாவரம், குரோம்பேட்டை, ஆலந்தூர், மீனம்பாக்கம், மடிப்பாக்கம், வேளச்சேரி, சோழிங்கநல்லூர், துரைப்பாக்கம், மேடவாக்கம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் மாமல்லபுரம் வருகின்றனர். அப்படி வரும் பயணிகள் புராதன சின்னங்களான கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு, வெண்ணெய் உருண்டை பாறை, புலிக்குகை உள்ளிட்டவற்றை சுற்றிப் பார்த்து அதன் முன்பு நின்று தங்களது செல்போனில் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டு மகிழ்கின்றனர்.

தற்போது, கடந்த மாதம் 17ம் தேதி முதல் இம்மாதம் மே 31ம் தேதி வரை பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை சேர்ந்த ஏராளமானோர் தங்களது குடும்பத்தினருடன் மாமல்லபுரத்தில் குவிய தொடங்கியுள்ளனர். இனி வரும் நாட்களில் பயணிகளின் கூட்டம் தொடர்ந்து அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, சுற்றுலா பயணிகளின் நலன் கருதி மாதவரம், பிராட்வே, மெரினா பீச், அடையாறு, திருவான்மியூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து மாமல்லபுரத்துக்கு கூடுதல் மாநகர பேருந்துகளை இயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**ஏசி பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?**

சென்னை அடையாறில் இருந்து தடம் எண் 588, தாம்பரத்தில் இருந்து தடம் எண் 515 ஆகிய இரண்டு மாநகர ஏசி பேருந்துகள். கடந்த ஓராண்டுக்கு முன்பு எந்தவொரு முன்னறிவிப்புமின்றி திடீரென நிறுத்தப்பட்டது. ஓராண்டுக்கு முன்பு நிறுந்தப்பட்ட ஏசி பேருந்துகளை மீண்டும் இயக்க மாநகர போக்குவரத்து கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஜே. சாதிக்பாட்சா

மே 12 (1994)



தி.மு.க. பொருளாளராக 1977ஆம் ஆண்டு முதல் பொறுப்பு வகித்தவர். அண்ணா, கலைஞர் அமைச்சரவைகளில் அமைச்சராகப் பணியாற்றியவர்.

சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

"கழகத்தின் வெற்றியிலும் – தோல்வியிலும் – சோதனையிலும், சாதனையிலும் – கொடிய வெயிலிலும், நிழலிலும் கூடவே இருந்து அசையாத மலையாக எதற்கும் ஊசலாடாத இதயத்துடன் நமக்கு துணையாக இருந்த தங்கத்தூண் சாய்ந்து விட்டதே" என தலைவர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும்விழாவில், இவருக்கு கலைஞர் விருது வழங்கி சிறப்பித்தார் கலைஞர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.